செ.வெ.எண்.38 நாள் : 25.04.2020

## அரியலூர் மாவட்டம்

## தூய்மைப்பணி புரிவோர் அடையாள அட்டை வைத்திருப்போர் விபரங்களை கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணிலோ அல்லது மின்னஞ்சல் முகவரியிலோ தகவல் தெரிவிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) கீழ் செயல்படடு வரும் தூய்மை பணி புரிவோர் நல வாரியம் மூலமாக 2008ஆம் ஆண்டில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்த தூய்மை பணியாளர்களுக்கு பணிபுரிவோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையை வைத்திருப்போர் தற்போது பணிபுரிந்தாலும் அல்லது ஓய்வு பெற்று இருந்தாலும் அதன்படி அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளை பெற்று பயன்பெறுவதற்கு ஏதுவாக அரியலூர் மாவட்டத்தின் தாட்கோ அலுவலக மேலாளர் எ.அம்பேத்கார் அவர்களை 9445029554 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், அலுவலக மின்னஞ்சல் முகவரி dmalrtahdco@yahoo.com தங்கள் வைத்துள்ள அடையாள அட்டை விவரங்களை அனுப்பலாம் அல்லது தாட்கோ அலுவலக தொலைபேசி எண்.04329 – 228315 என்ற எண்ணிலோ, கணினி இயக்குபவர் கைபேசி எண்.9659694157 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு தூய்மை பணியாளர்கள் தங்கள் அடையாள விவரங்கள் பற்றி தெரிவிக்கலாம். மேலும், மேற்கண்ட கைபேசி எண்களுக்கும் குறுஞ்செய்தி மூலமாகவும் அனுப்பலாம். எனவே, தூய்மை பணியாளர்கள் இதுதொடர்பாக தாட்கோ அலுவலகத்தை உடனடியாக தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**